தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 9-8-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## மஞ்சளின் இடைக்கால விலை முன்னறிவிப்பு

2015 ஆம் ஆண்டில் மஞ்சள் நடவின் போது வறட்சி நிலவியதால் தெலுங்கானா, ஆந்திரபிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் மஞ்சளின் பரப்பளவு குறைந்துள்ளது. கடந்த இரண்டு வருடங்களாக ஆந்திரபிரதேசம் மற்றும் கடலோர பகுதிகளில் பெரும் புயல்களின் தாக்கத்தாலும் மற்றும் பருவம் தவறிய வானிலையின் காரணமாகவும் மஞ்சள் உற்பத்தி குறைந்துள்ளது. 2015-16ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மஞ்சளின் பரப்பளவு 20 சதவிகிதம் அதிகரித்துள்ளது. ஆனால் அறுவடைக்கு முன் மழை அதிகரித்ததாலும் பருவநிலை மாற்றத்ததாலும் மஞ்சளின் தரம் குறைந்துள்ளது. ஈரோடு சந்தையில் விலை உயரும் போது மட்டும் மஞ்சள் வரத்து அதிகரிக்கின்றது. வரத்து அதிகரித்ததும் உடனடியாக விலை சரிவு ஏற்பட்டு மீண்டும் சீரான விலையை அடைகின்றது.

நல்ல விலையை எதிர்பார்த்து விவசாயிகள் ஈரோடு சேமிப்பு கிடங்கில் 1.0 இலட்சம் டன்கள் மஞ்சள் சேமித்து வைத்துள்ளனர். இந்தியாவில் பண்டிகை காலம் முன்னிட்டு மஞ்சளின் தேவை அதிகரிக்கும். எனவே, செப்படம்பர் மாதத்திற்கு மேல் தரமான மஞ்சளுக்கு நல்ல விலை கிடைக்க வாய்ப்புள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் ஊரகமேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் விலை முன்னறிவிப்பு திட்டம், கடந்த 15 ஆண்டுகளாக ஈரோடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நிலவிய மஞ்சள் விலையை ஆய்வு செய்து சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில் தரமான மஞ்சளின்

பண்ணை விலை செப்படம்பர் 2016 வரை, குவிண்டாலுக்கு ரூ.8,000-8,500 ஆக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே, மஞ்சள் உற்பத்தியாளர்கள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரகமேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-2431405

**தொழில் நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்,
வாசைன மற்றும் தோட்டக்கலை பயிர்கள்,
தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-6611284

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்